


முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (16.9.2024) விடுதலைப் போராட்ட வீரரும், முன்னாள் அமைச்சருமான எஸ்.எஸ். இராமசாமி படையாட்சியார் அவர்களின் 107வது பிறந்தநாளையொட்டி சென்னை, கிண்டியில் அமைந்துள்ள இராமசாமி படையாட்சியார் அவர்களின் திருவுருவச் சிலைக்கு கீழ் வைக்கப்பட்டுள்ள அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.எம்.வி. பிரபாகரராஜா, அசன் மௌலானா, துணை மேயர் மு. மகேஷ்குமார், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் எம். கிருஷ்ணசாமி, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே. ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

ஆலந்தூர் - கத்திப்பாரா மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில்

# தந்தை பெரியார் 146- வது பிறந்தநாள் சமூக நீதி நாள் - உறுதி மொழி ஏற்பு!

## காஞ்சி வடக்கு மாவட்டக் கழகத்தினர் திரண்டு வரும்படி

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள்!

காஞ்சிபுரம், செப்.17-

ஆலந்தூர் - கத்திப்பாரா மேம்பாலம் அருகில் உள்ள மாவட்ட தி.மு.கழக அலுவலகத்தில் தந்தை பெரியார் 146-வது பிறந்தநாளையொட்டி சமூக நீதி நாள் - உறுதி மொழி ஏற்பு நிகழ்ச்சி நடைபெறுகிறது என்றும் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகத்தினர் திரண்டு வந்து உறுதி மொழியை ஏற்றிட வேண்டும் என்று மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:-

'பகுத்தறிவுப் பகலவன்', "சுயமரியாதைச்சுடர்" தந்தை பெரியார் அவர்களின் பிறந்தநாளை ஆண்டுதோறும் சமூக நீதி நாளாகக் கடை பிடிக்க வேண்டும் என்றும், அவரது பிறந்த நாள் அன்று சமூகநீதி நாள் - உறுதி மொழியை ஏற்றிட வேண்டும் என்று, நம்முடைய திராவிட மாடல் முதல்வர் - நம்முடைய உயிரனைய தலைவர் அவர்கள் தமிழ்நாடு சட்டப்பேரவையில் 6.9.2021 அன்று அறிவித்ததற்கிணங்க, அந்த ஆண்டு முதல் தொடர்ந்து கடந்த 3 ஆண்டுகளாக ஆண்டு தோறும் செப்டம்பர் 17- தந்தை பெரியார் நாள் அன்று சமூகநீதி நாள் உறுதி மொழி ஏற்று வருகிறோம்.

இந்த ஆண்டு தந்தை பெரியாரின் 146-வது பிறந்தநாளான இன்று செப்டம்பர் 17-ஆம் தேதி செவ்வாய் கிழமை அன்று காலை மாவட்ட தி.மு.க. அலுவலகங்களில் கழகத்தினர் திரண்டு வந்து சமூகநீதி நாள் உறுதி மொழியை ஏற்றிட வேண்டும் என்று தலைமைக் கழகம் அறிவித்ததற்கிணங்க, காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் இன்று 17-ஆம் தேதி காலை 10.30 மணியளவில் ஆலந்தூர் - கத்திப்பாரா ஜோதி திரையரங்கம் அருகில் உள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் "சமூகநீதி நாள் உறுதி மொழி ஏற்பு" நிகழ்ச்சி நடைபெறுகிறது.

இந்த உறுதி மொழி ஏற்பு என்னுடைய (தா.மோ.அன்பரசன்) தலைமையிலும், மாவட்டக் கழக நிர்வாகிகள் முன்னிலையிலும் நடைபெறுகிறது.

கழக நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், கழக அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள் உள்ளிட்ட கழக செயல்வீரர்கள் அனைவரும் இதனையே அழைப்பாக ஏற்று இந்த உறுதி மொழி ஏற்பு நிகழ்ச்சியில் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.

ஒன்றிய முன்னாள் அமைச்சர் ப.சிதம்பரம் பிறந்தநாள்:

# இந்திய ஒன்றிய அரசியல் தளத்தில் செயல் திறமைமிக்கவராகவும் கொள்கை உறுதிமிக்கவராகவும் திகழ்கிறார்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து செய்தி!!

சென்னை, செப்.17

ஒன்றிய முன்னாள் அமைச்சர் ப.சிதம்பரம் அவர்களின் பிறந்த தினத்தையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துச் செய்தியில், "இந்திய ஒன்றியத்தின் அரசியல் தளத்தில், கருத்துத்தெளிவும், கொள்கை உறுதியும், செயல் திறனும் மிக்க ஆளுமைகளில் ஒருவராகத் திகழ்கிறார் மதிப்பிற்குரிய ப.சிதம்பரம் அவர்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து முதல்வர் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

இந்திய ஒன்றியத்தின் அரசியல் தளத்தில், கருத்துத் தெளிவும், கொள்கை உறுதியும், செயல்திறனும் மிக்க ஆளுமைகளில் ஒருவராகத் திகழ்ந்து வரும்



மதிப்பிற்குரிய ப.சிதம்பரம் அவர்களது 80ஆவது அகவையில் அவர் முழுமையான உடல் நலத்துடனும், உள மகிழ்வுடனும் நீடூழி வாழ அவரது பிறந்தநாளில் வாழ்த்துகிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

நான்முதல்வன்திட்டம்!பல்வேறுஉயர்கல்விநிறுவனங்களில்

# தமிழ்நாட்டு மாணவர்கள் சேர்த்துள்ளது மகிழ்ச்சியளிக்கிறது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, செப். 17 -

நான் முதல்வன் திட்டத்தின் கீழ் அரசுப் பள்ளிகளில் பயின்று பல்வேறு உயர் கல்வி நிறுவனங்களில் தமிழ்நாடு மாணவர்கள் சேர்ந்துள்ளது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத்தளப் பதிவில் பாராட்டி மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

இது குறித்து முதல்வர் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

தமிழ்நாட்டின் தரமான கல்வியோடு - மாணவர்களின் திறன் வளர்க்கும் நமது திராவிட மாடல் (Dravidian Model) அரசின் முன்னெடுப்புகளும், நமது இளைஞர்களின் முன்னேற்றத்துக்கான புதிய வாயிற்கதவுகளைத் திறப்பதைக் கண்டு பெரிதும் மகிழ்கிறேன்!

நான் முதல்வன் எனப் பெருமை கொள்ளும் ஒளிநிறைந்த நாளை நம் இளைஞர்களுக்காக!

இவ்வாறு முதல்வர் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

நந்தனம் ஒய்.எம்.சி.ஏ., மைதானத்தில் இன்று நடைபெறும் தி.மு.கழக பவள விழா மற்றும் முப்பெரும் விழாவிற்கு வருகை தரும்

# தி.மு.கழகத்தினர் பந்தலை அடைய வரவேண்டிய வழிகள் மற்றும் வாகன நிறுத்துமிடங்கள்!

## மாவட்டச் செயலாளர் அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு!

சென்னை, செப்.17-

சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர் அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிக்கை வருமாறு:-

சென்னை நந்தனம் ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் செப்.17 அன்று நடைபெறும் முப்பெரும் விழா மற்றும் பவள விழாவிற்கு வருகை தர மொத்தம் ஆறு வழிகள் இருக்கிறது. இந்த ஆறு வழிகளிலும் அலங்கார வளைவுகள் அமைக்கப்பட்டிருக்கிறது. 8 இடங்களில் வாகனங்கள் நிறுத்துவதற்கு, விளக்கு வசதிகளும் செய்யப்பட்டிருக்கின்றன.



1. அமைச்சர் பெருமக்கள், மேடையில் அமரும் சிறப்பு அழைப்பாளர்கள் அண்ணா சாலை வழியாக வந்து காஸ்மோபாலிடன் கிளப் முகப்பில் அமைக்கப்பட்டுள்ள 'பச்சை பந்தல்' வழியாக இடது புறத்தில் உள்ள நீச்சல் குளத்தின் அருகே வாகனங்களை நிறுத்திவிட்டு பந்தலை வந்தடையலாம்.

2. தி.மு.கழக மாநில பொறுப்பாளர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்டக் கழகச் செயலாளர்கள் அண்ணா சாலை வழியாக வந்து காஸ்மோபாலிடன் கிளப் முகப்பில் அமைக்கப்பட்டுள்ள 'பச்சை பந்தல்' வழியாக இடது புறத்தில் உள்ள Man Hockey Groundஇல் வாகனங்களை நிறுத்தி விட்டு பந்தலை வந்தடையலாம்.

3. வடசென்னையிலிருந்து அண்ணா சாலை வழியாக வேன்களில் வரும் தி.மு.கழகத்தினர் ஒய்.எம்.சி.ஏ., வளாகத்தில் இறங்கிக் கொண்டு, அருகில் உள்ள தாடண்டர் நகர் B - விளையாட்டு மைதானம் மற்றும் அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளி மைதானத்தில் வாகனங்களை நிறுத்தி விட்டு, பந்தலை வந்தடையலாம்.

4. இ.சி.ஆர். வழியாக வரும் நாகை, சிதம்பரம், கடலூர், பாண்டிச்சேரி, விழுப்புரம் வழியாக வரும் தி.மு.கழகத்தினர் ஒய்.எம்.சி.ஏ., வளாகத்தில் இறங்கிக்கொண்டு, கோட்டூர்புரத்தில் உள்ள சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான வாகனநிறுத்துமிடத்தில் வாகனங்களை நிறுத்த வேண்டும்.

5. Other VIPS : தாங்கள் வரும் வாகனங்களை Woman Hocky Groundஇல் வாகனங்களை நிறுத்திவிட்டு, நேரிடையாக விழா நடைபெறும் இடத்திற்கு வந்தடையலாம்.

6. தென் மாவட்டங்களில் இருந்து வருகைதருவோர் கிண்டி, சைதாப்பேட்டை வழியாக வந்து தாடண்டர் நகர் மைதானம் மற்றும் கடற்படைக்குச் சொந்தமான இடத்தில் வாகனங்களை நிறுத்தி விட்டு பந்தலை வந்தடையலாம்.

7. சென்னைத் தெற்கு, சென்னை தென்மேற்கு, சென்னை மேற்கு மாவட்டங்களிலிருந்து வருகை தருவோர் நந்தனம், அரசு கலைக்கல்லூரி மைதானத்தில் வாகனங்களை நிறுத்தி விட்டு, நிகழ்ச்சி நடைபெறும் இடத்தை வந்தடையலாம்.

8. இரண்டு சக்கர வாகனங்களில் வருகைதருவோர் ஒய்.எம்.சி.ஏ., மைதானத்தில் GYM Ground-இல் இடது மற்றும் வலது புறத்தில் வாகனங்களை நிறுத்திவிட்டு பந்தலை வந்தடையலாம்.

9. முதலில் வருகைத்தந்து வாகன நிறுத்துமிடங்கள் முழுவதும் நிரம்பும் பட்சத்தில் காவல்துறையினரால் அறிவுறுத்தப்படும் இடங்களில் வாகனங்களை நிறுத்த வேண்டும்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவித்துள்ளார்.

கோவை கூட்டத்தில் ஜி.எஸ்.டி. குளறுபடி குறித்துப் பேசிய தொழிலதிபரை அவமானப்படுத்திய

# ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்!

## கோவை மாவட்ட தி.மு.க. - இந்தியா கூட்டணிக் கட்சிகள் பங்கேற்பு!

கோவை, செப் 17-

கோவை டாடாபாத் பவர் ஹவுஸ் அருகில், ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நேற்று (16.9.2024) நடைபெற்றது.

பின்னர் திமுக இந்திய கூட்டணிக் கட்சிகளின் மாநில, மாவட்டத் தலைவர்கள் கண்டன உரை நிகழ்த்தினார்கள்.

கோவை மாநகர் மாவட்ட திமுக செயலாளர் நா. கார்த்திக் தலைமையில் நடைபெற்ற, இக்கூட்டத்தில், வடக்கு மாவட்ட திமுக செயலாளர் தொ.அ. ரவி, தெற்கு மாவட்ட திமுக செயலாளர் தளபதி முருகேசன், மாநகர் மாவட்ட திமுக அவைத் தலைவர் கணபதி ராஜ்குமார் எம்பி., கோவை மாநகராட்சி மேயர் இரா.ரங்கநாயகி, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் தேசிய செயலாளர் மயூரா எஸ். ஜெயகுமார், மாவட்ட திமுக இந்திய கூட்டணிக் கட்சிகளின் மாவட்ட தலைவர்கள், செயலாளர்கள் மதிமுக ஆடிட்டர் அர்ஜுனன் ராஜ், கணபதி செல்வராஜ், ஆர்.ஆர்.மோகன்குமார்,,சி.பி.ஐ.எம். மாவட்டச்செயலாளர் சி.பத்மநாபன், குணசேகரன், சிவஞானம், சி.பி.ஐ. எம்.ஆறுமுகம் ex.எம்எல்ஏ., மாவட்ட செயலாளர் சிவசாமி,த.பெ.தி.க. பொதுச்செயலாளர் கு.இராமகிருட்டிணன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் குமணன், கொ.ம.தே.க.கட்சியின் விஜயகுமார், ஆதித் தமிழர் பேரவை ரவிகுமார், திராவிட தமிழர் கட்சி வெண்மணி, மாவட்ட திமுக துணைச் செயலாளர்கள் கோட்டை அப்பாஸ், கல்பனா செந்தில், அசோக் ஆறுக்குட்டி,மாவட்ட நிர்வாகிகள், திமுக தலைமை கழக நிர்வாகிகள் பி.நாச்சிமுத்து,அ.தமிழ்மறை, திமுக தலைமை செயற்குழு உறுப்பினர்கள் வே.பாலசுப்பிரமணியன்,

ஆனந்த குமார், ஏர்போர்ட் ராஜேந்திரன்,டி.பி.சுப்பிரமணியன், துணை மேயர் இரா.வெற்றிச்செல்வன், திமுக இந்திய கூட்டணிக் கட்சிகளின் நகர,ஒன்றிய,பகுதி, வார்டு, பேரூராட்சி செயலாளர்கள், திமுக இந்திய கூட்டணிக் கட்சிகளின் அனைத்து உள்ளாட்சிப் பிரதிநிதிகள், திமுக இந்திய கூட்டணிக் கட்சிகளின் செயல்வீரர்கள், தொண்டர்கள் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.



ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீத்தாராமன் கோவையில் ஜி.எஸ்.டி. குளறுபடி குறித்துப் பேசிய தொழில் அதிபரை மிரட்டி மன்னிப்புக் கேட்க வைத்ததைக் கண்டித்து கோவையில் மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் தலைமையில் அனைத்துக் கட்சியினர் நேற்று திரண்டு ஆர்ப்பாட்டம் நடத்திய காட்சி!

முப்பெரும் விழா – சென்னை தெற்கு மாவட்ட

# இலக்கிய அணியினர் திரளாகப் பங்கேற்பீர்!

## மாவட்ட அமைப்பாளர் ம.பார்த்திபன் வேண்டுகோள்!

சென்னை, செப்.17-

இன்று (செப்டம்பர் 17) சென்னை நந்தனம் ஒய்.எம்.சி.ஏ. திடலில் நடைபெறும் தி.மு.க. பவளவிழா மற்றும் கழக முப்பெரும் விழாவில் சென்னை தெற்கு மாவட்ட இலக்கிய அணியின் நிர்வாகிகள் பெருந்திரளாக பங்கேற்றிடுமாறு மாவட்ட அமைப்பாளர் கொட்டிவாக்கம் ம.பார்த்திபன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவரது வேண்டுகோள் வருமாறு :

கழக பவளவிழா மற்றும் முப்பெரும் விழாவினை சிறப்பாக கொண்டாட வேண்டுமென்று கழக தலைவரும் தமிழகத்தின் நிரந்தர முதல்வர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சரும், கழக மாநில இளைஞர் அணி செயலாருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும் மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் அவர்களின் சென்னை தெற்கு மாவட்ட கழக பொதுஉறுப்பினர்கள் கூட்டத் தீர்மானத்தில் நிறைவேற்றப்பட்ட ஆலோசனைப்படி செப்டம்பர் 15 பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் 116வது பிறந்த நாளையும், செப்டம்பர் 17 பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களின் 146வது பிறந்தநாளான சமூக நீதி நாளை முன்னிட்டும் தமிழர்களுக்கான இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம் துவங்கிய நாளை முன்னிட்டும் முப்பெரும் விழாவாகவும், பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களால் 1949ம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் கழகம் வெல்லும் ஆலமரம் போல் பகுத்தறிவு சோலையாக பூத்துக்குலுங்கும் சூழலை உருவாக்கிட கடந்து வந்த பாதைகளில் சந்தித்த சோதனைகள், வேதனைகள் கழக வரலாற்றை தொகுத்து இன்றைய தலைமுறையினர் அறிய 75 ஆண்டுகள் நிறைவு பெற்று மக்களுக்கு பணியாற்றி இந்த 2024 ஆம் ஆண்டு பவளவிழா ஆண்டாக கொண்டாடப்படுகின்றன.

எனவே சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும் மருத்துவ மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் வரவேற்பிலும் கழக பொதுச்செயலாளரும், நீர் வளத்துறை அமைச்சருமான துரைமுருகன் தலைமையில் தி.மு.க. பவளவிழா மற்றும் முப்பெரும்விழாவாக சென்னை நந்தனம் ஒய்.எம்.சி.ஏ திடலில் 17.09.2024 செவ்வாய்க்கிழமை மாலை 5 மணியளவில் நடைபெறவுள்ளது. சென்னை தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட இலக்கிய அணியின் மாவட்ட நிர்வாகிகள், மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், பகுதி துணை அமைப்பாளர்கள், பெருந்திரளாக இவ்விழாவில் பங்கேற்று இலக்கிய அணிக்கு சிறப்பு சேர்த்திடுமாறு சென்னை தெற்கு மாவட்ட இலக்கிய அணியின் மாவட்ட அமைப்பாளர் கொட்டிவாக்கம் - ம. பார்த்திபன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பரிதி இளம் சுருதி தலைமை! சொ.வேலு பங்கேற்பு!

# எழும்பூர் 99-வது வட்டத்தில் நலத்திட்ட உதவிகள்!

## அமைச்சர் பி.கே. சேகர்பாபு வழங்குகிறார்!

சென்னை,செப்.17-

கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் கழக இளைஞரணி செயலாளரும் இளைஞர் நலம் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு அணி அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கழக அயலக அணி மாநில துணைச் செயலாளர் மற்றும் எழும்பூர் சட்டமன்ற தொகுதி 99 வது வார்டு மாநகராட்சி மன்ற உறுப்பினர் பரிதிஇளம் சுருதி தலைமையில் எழும்பூர் வடக்கு பகுதி செயலாளர் சொ. வேலு எம்.சி. முன்னிலையில் 99வது வட்ட கழக செயலாளர் ஆர். எம் ரங்கநாதன் முன்னிலையில் எழும்பூர் சட்டமன்ற தொகுதி 99வது வார்டுக்கு உட்பட்ட புரசைவாக்கம் நெடுஞ்சாலையில், கழக முப்பெரும் விழா மற்றும் பவள விழாவை முன்னிட்டு இன்று (17.9.2024) காலை 11 மணிக்கு கழக இருவண்ண கொடி ஏற்றும் நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

அமைச்சர் சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் பி.கே.சேகர்பாபு நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார்.

இதில் மாவட்ட கழக, பகுதி கழக, வட்ட கழக, நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக செயல்வீரர்கள், அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.


**பெருநகர சென்னை மாநகராட்சி**
**இயந்திர பொறியியல் துறை**

**குறுகிய கால மின்னணு ஒப்ப அறிவிப்பு**

கீழ்காணும் பணிகளை மேற்கொள்ள கண்காணிப்பு பொறியாளர் (இ) அவர்களால் குறுகிய கால மின்னணு ஒப்பம் கோரப்படுகிறது

**M.E.D.C.No.M1 / 2075/ 2024**
**Hiring of Additional High Capacity Dewatering Pumps (80 - 100 HP) (6000 LPM) for Zone I to V for a period of Two Months between September - 24 to December - 24**

**பணியின் தோராய மதிப்பு : ரூ.1,70,62,395/-**

முன் வைப்பு தொகை : பணியின் மதிப்பில் ஒரு சதவீதம்

ஒப்பம் சமர்ப்பிக்க இறுதி நாள் மற்றும் நேரம் : **25.09.2024 பிற்பகல் 3.00, மணி**

ஒப்ப திறப்பு நாள் மற்றும் நேரம் : **26.09.2024 பிற்பகல் 3.30 மணிக்கு**

மேலும் விவரங்களுக்கு : **https://tntenders.gov.in** இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ / 3750 / ஒப்பந்தப்புள்ளி / 2024

**கண்காணிப்பு பொறியாளர் (இ)**